**பீசீசீ லங்கா கம்பனி – 2022/2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பீசீசீ லங்கா கம்பனியின் (“கம்பனி”) 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுமற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமா்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, கம்பனியின் 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமா்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிா்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்குஉள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது

கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின்தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 கணக்கீட்டு குறைப்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 திசெம்பர் 17 ஆம் திகதிய 15/1874/702/010-VII ஆம் இலக்க மற்றும் 2016 ஏப்ரல் 20 ஆம் திகதிய 16/0597/731/009-I ஆம் இலக்க அமைச்சரவை முடிவுகளின் மூலம் கம்பனிக்கு சொந்தமான 6 ஏக்கர் நிலப்பகுதியொன்று 2019 ஆம் ஆண்டில் கொழும்பு நீதிமன்ற சதுக்கத்தை நிர்மாணிப்பதற்காக நீதி அமைச்சிற்கு கையளிக்கப்பட்ட இந்தக் காணி 2022 ஆம் ஆண்டில் ரூபா 7,229 மில்லியனாக மதிப்பிடப்பட்டது. அமைச்சினால் செலுத்தப்பட்ட வீதவரி ரூபா 21 மில்லியனால் குறைக்கப்பட்டு, ரூபா 7,207 மில்லியன் பெற வேண்டியவைகளாக நிதிக்கூற்றுக்களில் பதிவு | 2023/2024 கணக்காண்டில் திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேவையான சீராக்கங்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

செய்யப்பட்டிருந்தாலும், அந்த சொத்தை அகற்றியதன் மூலம் எழுந்த ஈட்டப்படாத இலாபம் ரூபா 3,389 மில்லியன் நிதிக்கூற்றுக்களில் மீளமதிப்பீட்டு இலாபமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டிய கடன் பட்டோரில் உள்ளடக்கப்பட்ட 12 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாக மற்றும் 05 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாக காணப்பட்டு வருகின்ற முறையே கூட்டுத்தொகை ரூபா 1,119,956 மற்றும் கூட்டுத்தொகை ரூபா 7,157,381 ஆன நிலுவைகளை அறவிடுவதற்கு கம்பனிக்கு இன்றுவரை முடியாதிருந்தது. | சில நிலுவைகளை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழுவின் மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் பதிவளிக்குமாறு பொது முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து ஆலோசனை பெறப்பட்டுள்ளது. ஏனைய நிலுவைகளை பின்னர் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவைகளை அறவிடுவதற்கு அல்லது அறிவுறுத்தல்களின்படி பதிவளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2003 ஆம் ஆண்டில் களுபோவிற்றியான தேயிலை கம்பனியிலிருந்து ரூபா 10,000,000 படி ஆன கடன் தொகையொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன், கம்பனியிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 10,000,000 ஆன கடன் தொகை 2022 யூன் மாதம் தீர்க்கப்பட்டிருந்த போதிலும் செலுத்த வேண்டிய வட்டி ரூபா 51,574,327 தீர்க்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 1985, 2002 மற்றும் 2004 ஆகிய வருடங்களில் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து பெறப்பட்ட ரூபா 58,265,037 ஆன தொகை மற்றும் வட்டி ரூபா 61,177,037 தீர்க்கப்படுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | தெங்கு அபிவிருத்தி சபை, களுபோவிற்றியான தேயிலை கம்பனியுடன் நடைபெற்ற கலந்துரையாடலின்போது தெங்கு அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து பெறப்பட்ட ரூபா 58,265,037 ஆன கடன் தொகையை பொது திறைசேரிக்கு செலுத்துமாறு அறிவுறுத்தல்கள் பெறப்பட்டதுடன் அதற்கான ரூபா 61,177,036.60 வட்டியை பதிவளிப்பதற்கு முடிவு செய்யப்பட்டது. அத்துடன் களுபோவிற்றியான தேயிலை கம்பனிக்கு செலுத்த வேண்டிய ரூபா 51,118,341.40 ஆன வட்டி மிகவும் அதிகமான பெறுமதியாக உள்ளதால், எதிர்காலத்தில் அத்தொகையை பதிவளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமென பொது திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. | மீதிகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 11 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்படும் ரூபா 40,479,328 தொகையான செலுத்த வேண்டிய வீதவரி, பாதுகாப்பு வரி, பொருட்கள் மற்றும் சேவைகள் வரி, வட் வரி நிலுவை மற்றும் கடன் கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பீ.சீ.சீ லங்கா நிறுவனத்தினால் முதலீடு செய்யப்பட்ட நிலையான வைப்புத்தொகைகள் முதிர்ச்சியடையும் போது அவற்றை இரத்து செய்து உரிய கொடுப்பனவுகளைச் செலுத்துமாறு பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | கடனை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் அரச நிறுவனங்களுக்கான செயற்பாட்டு கைநூலின் 6.6 ஆம் பந்தி | (i) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து அறுபது (60) நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், கம்பனியால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2023 ஒக்டோபர் 20 ஆம் திகதி அதாவது 4 மாதங்கள் மற்றும் 20 நாட்கள் தாமதத்துடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.<br><br>(ii) 2023 ஒக்டோபர் 25 ஆம் திகதி வரை வரைவு ஆண்டறிக்கை பிரதியொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை. | குறித்த நேரத்தில் நிதிக்கூற்றுக்களை முடிப்பதற்கு முடியாத காரணத்தால், நிறுவனம் மறுசீரமைப்பு பட்டியலில் உள்ளதால், நிதியமைச்சிற்கு ஒப்படைக்க வேண்டியுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 149,169,835 ஆன இலாபமொன்றாவதுடன் அதனோடொத்த கடந்த வருடத்தின் இலாபம் ரூபா 124,752,053 ஆகும். அதற்கமைய கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டில் நிதிப் பெறுபேறுகளில் ரூபா 24,417,782 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு விற்பனைக்கிரயம் ரூபா 63,459,173 ஆல் அதிகரித்திருந்த போதிலும், மொத்த வருமானம் ரூபா 82,643,648 ஆல் அதிகரித்தமை மற்றும் மொத்தச் செலவுகள் ரூபா 5,822,505 ஆல் குறைவடைந்தமை பிரதான காரணங்களாக அமைந்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் தலைமை அலுவலகத்தில் மற்றும் வத்துபிடிவல வளாகங்களில் முறையே ரூபா 867,253 மற்றும் ரூபா 862,967 மதிப்புள்ள 26 இருப்புப் பொருட்கள் பல ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படாமல் இருப்பதுடன், அவற்றை கையிருப்பில் இருந்து அகற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் கம்பனியால் இதுவரை எடுக்கப்படவில்லை. | எண்ணெய் உற்பத்திக்கு சொந்தமான போத்தல்கள் பெட்டிகள், லேபிள்கள் டெண்டர் விடப்பட்டு விற்பனை செய்யப்படும். மேலும், எதிர்காலத்தில் பயன்படுத்தப்பட்ட தார் பீப்பாய்களை விற்பனை செய்வதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளது. 2023/2024 இல் தோட்டங்களில் இருப்புகளை அகற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்படும். | பயன்படுத்த முடியாத இருப்புக்களை அப்புறப்படுத்த வேண்டும். |
| (ஆ) | முழுமையாக தேய்விடப்பட்டுள்ள தற்போதும் பயன்படுத்தப்பட்டவாறு காணப்படும் ரூபா 48.9 மில்லியன் கிரயமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பயன்படு ஆயுட்காலத்தை மீளாய்வு செய்வதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்தச் சொத்துக்களில், தற்போது பயன்படுத்தப்படாத இயந்திரங்கள் பெருமளவு அகற்றப்பட்டு, மீதமுள்ள முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட அனைத்து சொத்துக்களும் 2023/2024 நிதியாண்டில் மீள்மதிப்பீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்பட்டு கணக்குகளில் தேவையான சீராக்கங்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனி மற்றும் வத்துபிடிவல வளாகங்களில் அமைந்துள்ள 110,010 சதுர அடிகள் பரப்பளவான 29 களஞ்சியங்கள் மற்றும் 3,600 மெற்றிக் தொன் இயலளவுடனான 4 எண்ணெய் தாங்கிகள் காணப்பட்டன. இந்த களஞ்சியத்தின் ஒரு சதுர அடி ரூபா 35 முதல் ரூபா 70 இற்கு இடைப்பட்ட தொகைக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | நாட்டில் நிலவும் மோசமான பொருளாதார நிலை காரணமாக தொழில்களை நடத்துவதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளதால் களஞ்சியங்களை வழங்குவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதுடன் இந்தக் களஞ்சியங்கள் அனைத்தையும் நவீன வசதிகளுடன் பழுதுபார்க்க நிறுவனம் திட்டமிட்டிருந்தாலும், நிதியமைச்சிற்கு கையளிக்கப்பட்டதன் பின்னர் இதற்காக நிறைய மூலதனச் செலவினங்களை மேற்கொண்டு அவ்வாறு நடவடிக்கை எடுக்க வேண்டாமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. | வருமானத்தை அதிகரிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2012 ஆம் ஆண்டின் போது பீ.சீ.சீ தலைமை அலுவலகத்தில் காணப்பட்ட சவர்க்கார உற்பத்தி இயந்திர ஆலை வத்துபிடிவல 03 ஏக்கர் பரப்பளவான முதலீட்டுச் சபையின் வளாகத்திற்கு கொண்டு சென்று நிறுவப்பட்டுள்ள போதிலும், அது பொருத்தப்பட்ட திகதி முதல் 2023 ஒக்டோபர் 31 ஆம் திகதி வரையிலும் பயன்படுத்தாது விளைவற்றுக் காணப்பட்டது. | பீ.சீ.சீ நிறுவனத்தின் வத்துபிடிவல தொழிற்சாலையில் நிறுவப்பட்ட சவர்க்காரம் தயாரிக்கும் இயந்திரம் தற்போது பயன்பாட்டில் உள்ளது. ஆனால் சவர்க்கார நூடுல்ஸ் தயாரிக்கும் இயந்திரம் நிறுவப்பட்டும் அதன் பணிகள் முறையாக முடிக்கப்படவில்லை. பீ.சீ.சீ நிறுவனம் அதில் நிறுவப்படும் போது எதிர்காலத்தில் தேவையான பணிகளைச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | பயன்படுத்த முடியாத இயந்திரங்கள் தொடர்பில் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிறுவனத்திற்கு சொந்தமான 15 வாகனங்கள் இருந்ததுடன் அவற்றில் 4 (Land Vehicles மற்றும் Fork Lift உட்பட) 2 மற்றும் 4 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக இயங்காமல் வாகன முற்றத்தில் நிறுத்தப்பட்டிருந்தன. | இந்த வாகனங்கள் இயக்கத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளதால், பணிப்பாளர் குழுவின் அங்கீகாரத்துடன் எதிர்காலத்தில் அகற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | பயன்படுத்த முடியாத வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 செப்டெம்பர் 22 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை இலக்கம் 30 இன் பிரகாரம் 2006 ஆம் ஆண்டில் கம்பனியின் மீள்கட்டமைப்பின் போது இச்சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு சம்பள படி நிலைகளில் வைத்து சம்பளம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் குறித்த ஆட்சேர்ப்பு நடைமுறை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் இன்றுவரை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. 2023 மார்ச் 31 ஆந் திகதியில் 42 நிரந்தர உத்தியோகத்தர்கள், ஒப்பந்த அடிப்படையிலான 6 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் மனித வள வழங்கல் மூலம் 20 முதல் 30 இற்கு இடைப்பட்ட அளவான உத்தியோகத்தர்கள் கம்பனியின் கடமைகளுக்காக இணைப்பு செய்யப்பட்டு மீளாய்வாண்டில் அதற்காக ரூபா 8,518,702 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பல சந்தர்ப்பங்களில், நிறுவனத்தின் முகாமைத்துவத்தினால், அமைச்சின் பரிந்துரைகளுடன் பீ.சீ.சீ நிறுவனத்திற்கான பணியாளர்களின் எண்ணிக்கை மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைகளை அங்கீகரிக்குமாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கோரிக்கைகள்ள சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | ஆட்சேர்ப்பு நடைமுறையை தயாரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியால் தேங்காய் எண்ணெயை வெளியில் இருந்து வாங்கி போத்தலில் அடைத்து வாடகை வருமானத்தை அதிகரிப்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து 2022/2023 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. இதில் 5 செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 4 செயற்பாடுகளின் செயல்திறன் 0 சதவீதமாக இருந்தது. மேலும் வருடத்தில் சுத்தமான தேங்காய் எண்ணெய் (Pure Coconut Oil) உற்பத்தி ஒரு செயற்பாடொன்றாக சேர்க்கப்பட்டாலும், வெள்ளை தேங்காய் எண்ணெயை வாங்கி போத்தலில் அடைத்தல் மட்டுமே மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வின்டிண்டிற்கான தேங்காய் எண்ணெய் வருமானம் ரூபா 760,387,431 ஆக இருந்ததுடன் இது வரவு செலவுத் திட்ட விற்பனை வருமானத்தில் 85 சதவீதமாகும். கம்பனியால் எதிர்பார்க்கப்பட்ட தேங்காய் எண்ணெய் விற்பனையின் அளவு 1279 மெ.தொன் ஆக இருந்தபோதிலும் 770 மெ.தொனனை மட்டுமே அடைவதற்கு முடிந்தது. | நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக அந்நிய செலாவணி பற்றாக்குறை, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் மின்சார நெருக்கடி போன்றவற்றால் புதிய முதலீட்டு நடவடிக்கைகளை நிறுத்துமாறு குறிப்பிடப்பட்டு திறைசேரி சுற்றறிக்கை வெளியிடப்பட்டமையால் முதலீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. பல ஊழியர்கள் வீட்டிலேயே தங்கி, சில நாட்கள் மட்டுமே பணிக்கு வந்ததால், மனிதவள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்த முடியாதிருந்தது. அந்நிய செலாவணி பற்றாக்குறையால் கொப்பரா இறக்குமதி நிறுத்தப்பட்டது. | திட்டத்தின் பிரகாரம் பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |